# வசந்த இதழ்
# Vasanta Ethal

KRISHNAMURTI FOUNDATION INDIA JUNE 2019 - SEPTEMBER 2019 Rs.2/- VOL 14 ISSUE 2



புரிதல் எனும் கடுமையான உத்வேகம்........2 பணிவாக இருப்பதற்கு தத்துவங்களும்.......4 ஆன்மீக வாழ்க்கை என்பது உனக்கு.........5


## மாற்றம் எனும் சொல்லுக்கு நாம் கருதும் பொருள் என்ன?

**ம**ற்றொருவரிடம் நமக்குள்ள பொறுப்பை நாம் அறிந்திருக்கிறோமா? குடும்பம், மனைவி, குழந்தை உங்களுக்கு இருப்பின், அவர்களோடு நீங்கள், பொறுப்பாக இருக்கிறீர்களா? அதாவது, அவர்கள் மீது அக்கறை உடையவராக, அவர்களிடம் அன்புடையவராக, அவர்களின் நலனை பற்றி சிந்திப்பவராக, அவர்கள், ஆரோக்கியமான நல்ல குடிமக்களாக ஆக வேண்டும் என்ற உணர்வுடையவரா நீங்கள்? ஒரு யுத்தத்தில் அவர்கள் சாகக்கூடாது என்பதை உணர்த்தும் சரியான கல்வி அவர்களுக்கு தேவைப்படுகிறது என்ற பொறுப்பு உங்களுக்கு உள்ளதா? அவர்களை சராசரி மனிதனாக ஆக்காதிருக்கும் பொறுப்பு உங்களுக்கு உள்ளதா? அல்லது, அவர்களை கவனிக்க உங்களுக்கு நேரமே இல்லையா? ஏனெனில், கணவனும் மனைவியும், இப்போது நடைமுறையில் உள்ளதுபோல, நீங்கள் வெளியே சென்று பணம் சம்பாதிக்க வேண்டும் என நினைக்கிறீர்கள். அதனால், குழந்தைகளுக்கு மிகச் சிறிய நேரமே ஒதுக்குகிறீர்கள். இது ஒரு நிதர்சன உண்மை. ஆக, உங்களுக்கு பொறுப்பு எங்கே உள்ளது? ஆ! உங்களுக்கு இதை பற்றிய ஆர்வம் இல்லை!

உங்களுக்கு எதில் ஆர்வம் உள்ளது என்ற கேள்வியை நாம் கேட்கிறோம். இது ஒரு நியாயமான கேள்வி என்றே நான் நினைக்கிறேன். நீங்கள் அன்பு, சுதந்திரம், ஆகாயத்தின் அழகு ஆகியவற்றை பற்றி பேசலாம், ஆனால், அது ஒரு வெளிப்புற ஆர்வம் மட்டுமே. ஆனால், அடிப்படையில், நம்முடைய ஆர்வம் எதில் உள்ளது?

**கூட்டத்திலிருந்து:** என் மீதே எனக்கு ஆர்வம். ஆம், அது சரி. உங்கள் மீதே உங்களுக்கு ஆர்வம் உள்ளது.

**கிருஷ்ணமூர்த்தி:** சற்றே பொருங்கள்! நீங்கள் சொல்வது சரியே! ஒவ்வொருவருக்கும் அவர்மீதே அக்கறை உள்ளது. அதன்மீது நமது சமுதாயம், கலாச்சாரம், மதம் ஆகியவை அடிப்படையாக உள்ளது. இல்லையா?

ஒவ்வொருவருக்கும் அவர்மீதே அக்கறை உள்ளது. தன் வளர்ச்சி, தன் எதிர்பார்ப்பு இது போன்ற ஏராளம். அடிப்படையில், மனிதனாக, நாம் அனைவரும் ஒன்றே என்று நீங்கள் உணர்கிறீர்களா? இதை கருத்தாக அல்லாமல் நிதர்சன உண்மையாக உணர்கிறீர்களா? நீங்கள் இந்தியாவுக்குச் செல்லும் போது, அங்கே, துன்பம், குழப்பம், கவலை, விரக்தியுள்ள மக்கள், அவர்கள் உருவாக்கிய தங்கள் சின்னஞ்சிறு தெய்வங்களை நோக்கி ஓடுவதை கவனிப்பீர்கள். நீங்கள் ஐரோப்பாவிற்கு வந்து பார்த்தால், அங்கேயும் அதே கதைதான். அவர்களுக்கு, தங்களுடைய இயேசு கிறிஸ்து இருக்கிறார். புரிகிறதா? நீங்கள் இங்கு வந்திருப்பதும் அது போன்றதே. உங்களுக்கு புரிகிறதா?

முதலில், நீங்கள் அனுபவிக்கும் அதே துயரத்தையே உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கிறான் என்பதை சொல்லளவில் இல்லாமல் நம் இதயம், இரத்தம், முழு சிந்தனையிலும் உணரவேண்டியது அவசியம். தனிமை, விரக்தி, மனக்கொந்தளிப்பு, அசாதாரண நிச்சயமற்ற தன்மை, பாதுகாப்பின்மை உணர்வு. அவர்கள் 10,000 அல்லது 2,000 மைல்கள் தொலைவில் வாழ்ந்தாலும், அல்லது, இங்கே வாழ்ந்தாலும், அவர்கள் அனைவரும் மனோரீதியாக ஒன்றாக இணைந்திருக்கிறார்கள். உங்கள் நரம்புகளில், இரத்தத்தில், இதயத்தில், மனதில், இதை நீங்கள் ஆழமாக உணர்ந்தால், அப்போது நீங்கள் பொறுப்புள்ளவராகிறீர்கள்.

> கணவனும் மனைவியும், இப்போது நடைமுறையில் உள்ளதுபோல, நீங்கள் வெளியே சென்று பணம் சம்பாதிக்க வேண்டும் என நினைக்கிறீர்கள். அதனால், குழந்தைகளுக்கு மிகச் சிறிய நேரமே ஒதுக்குகிறீர்கள். இது ஒரு நிதர்சன உண்மை.

நீங்கள் இவற்றையெல்லாம் செவிமடுத்திருக்கிறீர்கள். மனிதனான நீங்கள் ஏன் மாற்றம் அடையவில்லை? எது உங்களை தடுக்கிறது? நாம் ஒவ்வொருவரும் இக்கேள்வியை கேட்டுக்கொண்டால்–சொல்லளவில் கேட்காமல், அல்லது, வெறும் புத்தியளவிலோ, ஒரு பொழுது போக்கிற்காகவோ கேட்காமல். இக் கேள்வியை மிகவும் தீவிரமாகவும், ஆழமாகவும் கேட்டால், உங்கள் பதில் என்ன? இப்பிரச்சினைக்கு உங்கள் பதில் என்ன? - ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மனிதன் என்ற நிலையில் இருக்கும் நாம், ஏன் மாற்றமடையவில்லை? இதை கேட்டுகொண்டிருக்கும் நீங்கள் ஏன் மாற்றமடையவில்லை? நீங்கள் மாற்றமடையவில்லை எனில், அதன் விளைவு என்ன ஆகுமென்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் தேசியவாதியாக, குறிப்பிட்ட வகுப்பினராக, ஒற்றைப்படுத்தப்பட்டவராக, தனிமைப்படுத்தப்பட்டவராக

இருப்பீர்கள். அதன் காரணமாக, உலகத்தோடு தொடர்பற்றவராகஇருப் பீர்கள் - எப்போதும் சண்டையிட்டுக் கொண்டு, ஒருவரையொருவர் அழிக்க இன்னும் அதிகமான ஆயுதங்களை உருவாக்கிக்கொண்டு இருப்பீர்கள். இவ்விஷயத்தில் நீங்கள் அக்கறை உடையவர் எனில், இந்த கேள்வியை, ஏன் உங்களிடமே நீங்கள் கேட்டுகொள்ளக்கூடாது? - 'மனிதனாக இருக்கும் நான், இவை யெல்லாவற்றையும் அறிந்து உணர்ந்த நான், ஏன் இன்னும் மாறவில்லை?' உங்கள் பதில் என்னவாக இருக்கும்?

வாழ்க்கை என்பது ஒன்றே- உலகளாவிய ஒன்றுபட்ட ஓர் இயக்கம். இது போலவே, நம் சித்தம், மனித வர்க்கமனைத்திற்கும் பொதுவானதாகும். நான் பரிபூரண மாக மாற்றமடைந்தால், நிச்சயமாக, அது ஏனைய மனிதனின் சித்தத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அப்படி யெனில், நீங்கள் ஏன் மாற்றம் அடைவதில்லை?

Ojai, Public Discussion - 3
17th April 1979

**கேள்வி:** நாம் ஏன் மாறவில்லை?

**கிருஷ்ணமூர்த்தி:** ஆ! இது ஓர் அருமையான கேள்வி. நானே இக் கேள்வியை கேட்கலாம் என்று இருந்தேன். எனக்கு அறிமுகமுள்ள, இங்கே வருடங்களாக வருவோரை பார்த்து, 'நாம் ஏன் இன்னும் மாற வில்லை?' என்று நான் கேட்டிருக் கிறேன். எது நம்மை மாற்ற வல்லது? இக்கேள்வியை உங்களிடமே நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். எந்த ஆற்றல், எந்த உந்து சக்தி, எந்த தீவிரம் நம்மை மாற்ற வல்லது? மாற்றம் எனும் சொல்லுக்கு நாம் கருதும் பொருள் என்ன? ஒன்றிலிருந்து வேறு ஏதோ ஒன்றாக மாறுவது - இல்லையா? இங்கு 'வேறொன்று' என்பது முன்னரே முடிவுசெய்யப்பட்ட இலக்கு. ஆகவே, அது மாற்றமே அல்ல.

இந்த உண்மையை நீங்கள் உணர்கிறீர்களா என்று எனக்கு தெரிய வில்லை. கருத்தூன்றி நிறுவப்பட்ட அமைப்புகளுக்கு ஏற்றவாறு நம்மை நாம் மாற்றிக்கொண்டால், அது மாற்றமே இல்லை. அது ஏற்கனவே இருந்த ஒன்றின் புதிய தோற்றமே; பழையதின் தொடர்ச்சியே. நாமோ, மேலும் மாற்றத்தை நோக்கி செல்வதாக கற்பனை செய்துகொள் கிறோம். ஆனால், அதே சிந்தனைச் சங்கிலியின் தொடர்ச்சியே; பழைய தின் மாறுபட்ட ஓர் இயக்கமே.

ஆக, மாற்றம் என்பதற்கு நாம் கருதும் பொருள் என்ன? பேச்சாளரை பொறுத்தவரை மாற்றம் என்பதின் அர்த்தம் பழையதினை முற்றுபெற செய்வதே. ஏற்கனவே 'இருப்பதற்கு' சற்று மாற்றம் கற்பித்து அதனையே தொடர்வது அல்ல. உங்களுக்கு புரிகிறதா?

உதாரணத்திற்கு, வெளியுலகத் தில் நிகழ்கின்ற புரட்சி எனும் கருத்தை எடுத்துக்கொள்வோம் - கம்யூனிசவாதி, லெனின்வாதி, ட்ரொட்ஸ்கிவாதி ஆகியவர்கள் கருதும் 'மாற்றம்'?!!! அவர்களை பொறுத்தவரை புரட்சி என்பது சமுதாயத்தின் ஒட்டுமொத்த வெளிப் புற கட்டமைப்பை, சூழ்நிலையை மாற்றுவதன் மூலம் புதிய மனிதனை தோற்றுவிக்க முயற்சிப்பதாகும். அதாவது, ட்சார், கம்யூனிசம், போல்ஷெவிக் போன்ற இயக்கங்கள், வெளிப்புற கட்டாயத்தினால் என்றா வது ஒரு நாள் புதிய மனித சமுதாயம் தோன்றும் என்று நம்புகிறார்கள்.

ஆனால், அவர்களால் அதை நிறைவேற்ற முடியவில்லை. மாறாக, அவர்கள் தாங்கொணா பாதக செயல் களை புரிந்திருக்கிறார்கள். ஆக, நாம் உள்ளத்தின் மாற்றத்தைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கிறோம்.

## புரிதல் எனும் கடுமையான உத்வேகம் இருக்கும்போதே துன்பத்திற்கு முடிவு உண்டாகிறது

ஒவ்வொரு பிரார்த்தனையும் ஒரு வேண்டுதல்; அதாவது, வேண்டி எதையாவது பெறுவதற்காக. மனது பாரமில்லாமல் தெளிவு இருக்கும்போது வேண்டுதல் இருப்பதில்லை. பிரச்சினை இருக்கும்போது, அப்பிரச்சினை நீங்குவதற்காக நாம் அறியாமலேயே சில வகை பிரார்த்தனைக்கு, நம் உதடுகள் தயாராகி விடுகின்றன. அப்போது, ஏதோ ஒரு கடவுளோ அல்லது உள்மனதின் கடவுளோ நம் வேண்டுதலுக்கு பதில் தரும் என்ற நம்பிக்கை உண்டாகிறது.

சிலநேரங்களில், தற்செயலாகவோ, எதிர்பாராமல் ஒரே நேரத்தில் நிகழும் சாதகமான சம்பவங்களினாலோ பிரார்த்தனை நிறைவேற்றப் படுகின்றன. அப்போது, கடவுள் பதிலளித்துவிட்டார்; பிரார்த்தனை நியாயப்படுத்தப்படுகிறது. பல்வேறு வீடுகளில் கும்பிடுவதற்கு இதுபோல கடவுள்கள் ஏராளம். ஆனாலும் அனைத்து வகையான பிரார்த்தனையும், வேண்டுதலும் இருந்தபோதிலும் மனிதன் துன்பப்பட்டுக்கொண்டே இருக்கிறான்.

புரிதல் எனும் கடுமையான உத்வேகம் இருக்கும்போதே துன்பத்திற்கு முடிவு உண்டாகிறது. ஆனால், பிரார்த்தனையோ எளிதானது, அது போற்றப் படுகிறது, அது கோருவதும் சிறிதே; தன்னை அறிதல் என்பதே புரிதலுக்கு தேவை.

அது சில நேரங்களில் மட்டும் இருக்கும் ஒன்று அல்ல. தன்னைப்பற்றி அறிதலுக்கு முடிவேது?

தன்னை அறிதல் என்பது ஒவ்வொரு கணத்திலும், ஒவ்வொரு செயல்களிலும் இருப்பதாகும். அறிவை சேமிப்பது இல்லாததால் அதற்கு தொடர்ச்சி என்பது இல்லை. பழக்கத்திற்குத்தான் தொடர்ச்சி இருக்கும். இயந்திரத்தனமான சிந்தனைக்குத்தான் தொடர்ச்சி இருக்கும்.

27th October 1961, Krishnamurti's Notebook



Vasantha Ithaz Newsletter May 2019.indd 2 02-05-2019 3:46:56 PM

மன அமைப்பினை முன்னேற்ற, மெருகூட்ட, மோசமானதிலிருந்து மிதமான வன்முறையுள்ளதாக ஆக்கும் அத்தகைய மாற்றத்தைப் பற்றி நாம் விவாதிக்கவில்லை. மாறாக, சித்தத்தின் மொத்த கூறுகளையும் முடிவுற செய்யும் பரிபூரண மாற்றத்தைப் பற்றி விசாரணை செய்துகொண்டிருக்கிறோம். மாற்றம் எனும் சொல் இதற்கு பொருந்தவில்லை. 'அடிப்படை உரு மாற்றம்' என்று சொல்லலாம்.

ஆக, நாம் ஏன் மாறவில்லை? தற்போதைய நிலையிலிருந்து முற்றிலும் கடந்து செல்லும் மாற்றம். உங்களுக்கு இக்கேள்வி தெளிவாக இருக்கிறதா? லட்சக்கணக்கான வருடங்களுக்குப் பிறகும், மனிதர்களாகிய நாம், நம்மை ஏன் இந்த பாழான நிலைக்கு தாழ்த்திக்கொண்டு விட்டோம்? - பயங்கரமான, அச்சமூட்டும், வன்முறையான, கொடூரமான, ஒரு துண்டு நிலத்திற்காக கொலைகள் செய்யும் பாழான இந்நிலை - கடவுளே!!! ஏன் இந்நிலை?

'இவையனைத்திற்கும் ஏன் முற்றுப்புள்ளி வைக்கவில்லை?' என்பதே இப்போதுள்ள கேள்வி. இதற்கு பதிலளியுங்கள்! நீங்கள் அனைவரும் படித்தவர்கள், தொழிலாளிகள், குறிப்பிட்ட துறைகளில் வல்லவர்கள், அலுவலகப் பணியாளர்கள், பணம் சம்பாதிப்பவர்கள்... இருந்தும், ஏன் நீங்கள் தீர்க்கப்பட வேண்டிய அடிப்படை பிரச்சினையை இன்னும் தீர்க்கவில்லை?

வெளிப்புற கட்டாயத்தினால் உள்நிலை மாறுமா? வெளிப்புற கட்டாயத்தினால் மனம் அடிப்படை உருமாற்றம் பெற இயலுமா? அடிப்படை உருமாற்றம் என்பது பரிபூரணமான மாற்றமாகும்; இதுவரை இருந்து வந்ததின் இல்லாமை ஆகும். வேறொன்றாக மாறுவது அல்ல. இதுவரை இருந்துவந்தது என்னவென்றால், நம் கோபம், வன்முறை, முட்டாள்தனம், தன்னை காப்பாற்றும் என நம்பி சிக்கிக் கொண்டுள்ள சில மூடத்தனமான மனமயக்கங்கள் மற்றும் பிம்பங்கள்.

எது நம்மை மாற்றமடையச் செய்யும்? வெளிப்புற கட்டாயத்தால் இது நிகழவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. இது மிகத்தெளிவாக தெரிகிறது. உங்களுக்கு புரிகிறதா? சமூகத்தை மாற்றுவதால், நீங்கள் மாற்றமடையப் போவதில்லை. ஏனெனில், சமூகத்தை உருவாக்கியது நீங்களே. இது தெளிவாக புரிகிறதா? இப்போதிருக்கும் இச்சமுதாயத்தை உருவாக்கியது நாமே; போர்கள் - நாட்டின் கௌரவத்தை காக்க, ஒரு சிறு நிலப்பகுதிக்காக ஒருவரையொருவர் கொல்வது. இவையெல்லாம் உங்களுக்கு புரிகிறதா? ஆயிரமாயிரம் வருங்களுக்குப் பின்னரும் நாம் பயத்திலிருந்து மீளவில்லை.

> எது நம்மை மாற்றமடையச் செய்யும்? வெளிப்புற கட்டாயத்தால் இது நிகழவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. சமூகத்தை மாற்றுவதால், நீங்கள் மாற்றமடையப் போவதில்லை. ஏனெனில், சமூகத்தை உருவாக்கியது நீங்களே.

எது நம்மை மாற்றும்? - நம்மை பற்றிய நம்முடைய அறிவா? நமக்கு வெளியிலிருக்கும் உலகைப் பற்றிய அறிவா? கொல்லவேண்டும், கொல்லக்கூடாது என்ற அறிவா? ஆயிரமாயிரம் வருடங்களாக சேகரித்த அறிவே, நாம் அடுத்தவரை கொல்வதற்கு உதவுகிறதோ என்னவோ? மேலும், அடுத்தவரை கொல்லக்கூடாது என்ற அறிவும் நமக்கு இருக்கிறது - இவையெல்லாம் நம்மை எங்கே இட்டுச் செல்கின்றன. ஆக, துயரம், வேதனை, பிணைப்பு, வலுக்கட்டாயம், மனம் மயக்கும் வெகுமதி, பயமுறுத்தும் தண்டனை இவையெல்லாம் நம்மை மாற்றமடையச் செய்கிறதா? இவை நம்மை மாற்றமடையச் செய்யவில்லை என்பது வெளிப்படை.

ஆக, எது நம்மை மாற்ற வல்லது? வெறும் மாற்றம் என்று சொல்லவில்லை. எது நம்மை பூரணமாக உருமாற்றம் செய்யும்? இந்த பயங்கர குழப்பம், துன்பம், வேதனை, கவலை ஆகியவற்றிற்கு எது முற்றுப்புள்ளி வைக்கும்? கண்ணீர் துளிகளா? நாம் நிறையவே கண்ணீர் வடித்துவிட்டோம். துயரமா? புற உலகிலிருக்கும் எதனாலும் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது. நாம் இதை புரிந்துகொள்கிறோமா என்று எனக்கு தெரியவில்லை.

கடவுள், இரட்சகர், வெளிப்புற சக்தி, பிரதிநிதி - என்றைக்குமே இவையெதுவும் நம்மை மாற்றப்போவதில்லை. இவ்விஷயங்களில் எல்லாம், நாம் மிக சாதுர்யமாக, தந்திரமாக செயல்படுகிறோம். தன்னைத்தானே

---

அன்புள்ள வாசகர்களுக்கு,

நீங்கள் வசந்த இதழ் உறுப்பினராக இருப்பதற்கு எங்கள் மனமார்ந்த நன்றி. ஜே கிருஷ்ணமூர்த்தியின் போதனைகள் மூலம் உங்களுடைய சொந்த வாழ்க்கையில் பல உள் புரிதலை இவ்விதழ் கொண்டுவந்திருக்கும் என நாங்கள் நம்புகிறோம். நீங்கள் நன்மை அடைந்திருந்தால், இந்த போதனைகளை உங்கள் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் பகிர்ந்து கொள்ள விரும்புவது இயற்கையே.

அவ்வாறு புதிய வாசகர்களுக்கு பகிர நினைப்பதை நாங்கள் வரவேற்கிறோம். பல வழிகளில் நீங்கள் பகிர முடியும். அவற்றில் ஒன்று பரிசளிப்பது. ஆம், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் பிறந்த நாள், திருமணம் போன்ற நிகழ்ச்சியில், கிருஷ்ணமூர்த்தியின் புத்தகத்தை பரிசு அளிப்பதன் மூலம் அவர்களும் கிருஷ்ணமூர்த்தியின் போதனைகளை படிப்பதற்கு நீங்கள் வாய்ப்பை ஏற்படுத்தலாம். புத்தகங்களை www.kfionline.org என்ற இணையதளத்தின் மூலமோ, கடைசி பக்கத்திலுள்ள எங்கள் முகவரிக்கு தொடர்பு கொண்டு ஆர்டர் செய்தோ பெறமுடியும்.



Vasantha Ithaz Newsletter May 2019.indd 3 02-05-2019 3:46:56 PM

ஒருவன் மிக சிரத்தையுடன் கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்வி இது. காலம், பரிபூரணமான உள் மாற்றத்தை கொண்டுவருமா? இலட்சக்கணக்கான ஆண்டுகளாக நாம் மாறவில்லை. காலம் நம்மை மாற்றவில்லை என்பது வெளிப்படை. புற உலகிலுள்ள எதனாலும் நமக்குள் பரிபூரண மாற்றத்தை கொண்டு வர இயலாது. எது நமக்குள் மாற்றத்தை கொண்டு வருமென்றால், அது நம் கவனமே; குழப்பமான நம் வாழ்க்கையின் மீதுள்ள விழிப்புணர்வே; உள்ளதை கவனித்து, மாற்ற முயற்சிக்காமல், அதிலிருந்து தப்பிக்க முயலாமல் அதனோடு முழுமையாக ஒன்றியிருத்தல் வேண்டும்.

அதை மாற்றவோ, அதை குறித்து எதுவும் செய்ய முயற்சிக்காமல் அதை நேரிடவேண்டும். உங்களுக்கு புரிகிறதா? இது மிகவும் சுவாரசியமானது. நாம், குரு, கடவுள்கள் போன்ற எல்லா வெளிப்புற பிரதிநிதிகளை முற்றிலும் நிராகரிப்போம்.

அறிவுள்ள எந்த மனிதனும் இவைகளை நிராகரிக்க முடியும். ஆனால், நீங்கள் உங்கள் உள்ளிருந்து இயக்கும் நபரை நிராகரிப்பதில்லை. புரிகிறதா? 'நான் இதை செய்யப் போகிறேன்' என்று கூறும் அந்த ஆட்டுவிக்கும் நபரை நிராகரிப்பதில்லை. கடந்த கால நினைவுகள், ஞாபகங்கள், அறிவு ஆகியவையே நம்மை ஆட்டுவிக்கும் நபர். அது முற்றிலுமாக உருமாற்றமடைந்து விட்டால், அப்போது, உள்ளதை உள்ளபடி சுதந்திரமாக கவனிக்க முடிகிறது. அவ்வாறு பூரண விழிப்புடன் கவனிக்கும்பொழுது. எது உள்ளதோ அது முழுவதுமாக முற்று பெறுகிறது.

ஆக, ஒருவன் தன் குழப்பம், துன்பம் ஆகியவற்றின் மீது 'செயல்படப்போகிறேன்' என்ற பெயரில் தப்பிக்காமல், அதனோடு முழுமையாக ஒன்றி வாழ்வதின் மூலம், தானே பெற்ற சுய தரிசனத்தாலேயே மாற்றம் சாத்தியமாகும்.

Ojai 1982 Q&A Meeting - 2, Question - 4

# பணிவாக இருப்பதற்கு தத்துவங்களும் கோட்பாடுகளும் தேவையில்லை

**கேள்வி:** 'வாழ்க்கையை புரிந்து கொள்ள, வாழ்க்கையையே அர்ப்பணிப்பீர்' என்று ஒருமுறை நீங்கள் சொன்னீர்கள், அதன் அர்த்தமென்ன?

**கிருஷ்ணமூர்த்தி:** எதற்காகவாவது உங்கள் வாழ்க்கையை முழுமையாக நீங்கள் அர்ப்பணித்ததுண்டா? கடவுளை நம்புகிறீர் எனில், கடவுளுக்கு மனமுவந்து உங்களை முற்றிலும் அர்ப்பணித்ததுண்டா? என் கேள்வி உங்களுக்கு புரிகிறதா? அல்லது, நாம் எப்போதும், சிறிதளவே கொடுத்து, அதே சமயம், பேரளவை பிடித்து வைத்திருக்கிறோமா? வாழ்க்கையை புரிந்துகொள்ள, அதாவது, தன்னையும், தன்னை சுற்றிலுமுள்ள உலகையும், மரத்தின் அழகு போன்றவற்றை புரிந்து கொள்ள, நீங்கள் அதற்கு ஒன்றை கொடுத்தேயாக வேண்டும்; கற்றுக் கொள்வதற்கு கொடுத்தேயாக வேண்டும். இது வெளிப்படை; நீங்கள் கொடுப்பீர்களா?

உங்கள் மனைவிக்கு, குழந்தைகளுக்கு முழுமையாக எதையாவது நீங்கள் கொடுத்திருக்கிறீர்களா? அல்லது, எப்போதுமே, ஒரு கொக்கி உங்களை பற்றி பிடித்திருக்குமா? நீங்கள் செல்வமுடையவரெனில் - உங்களில் சிலர் செல்வந்தராக இருப்பீர்கள் - மனம் உவந்து கொடுப்பீர்களா? அல்லது, அந்த பெருந்தன்மைக்கு பின்னால், வேறு ஏதாவது உள்நோக்கம் இருக்குமா? நான் மிகவும் செல்வமுடையவர்களை பார்த்திருக்கிறேன். அவர்கள், எவ்வளவு கருமியாக இருப்பார்கள்! அவர்கள் கோயிலை கட்டுவார்கள். இது பைத்தியக்கார உலகம்! அன்பரே! வாழ்க்கையைப் புரிந்துகொள்ள, நாம் வாழ்க்கைக்கு அதீத ஈடுபாடுடையவராய் இருக்க வேண்டும்; வாழ்வதற்கும், வாழ்வின் அழகை முரண்பாடில்லாமல் புரிந்துகொள்வதற்கும் அதீத ஈடுபாடுடையவராய் இருக்க வேண்டும்;

முரண்பாட்டை புரிந்துகொள்ள, பகுத்து ஆராயுங்கள், அதற்கான பணி செய்யுங்கள். யாரும் உங்களுக்கு அதற்காக உதவ மாட்டார்கள். ஆகையால், அதற்காக அசாதாரண வலிமை பெற்றிருக்க வேண்டும். நாம் தைரியமிக்கவர்கள்; ஆனால், வலிமையுடைவர்கள் அல்ல. இல்லையா?

**கேள்வி:** புரிந்துகொள்வதற்காக, காலமும் கடும் முயற்சியும், தேவைப் படுகிறது, அல்லவா?

**கிரு:** இல்லை, இங்கு முயற்சி தேவைப் படுவதில்லை, கடவுளே! அன்பு செய்வது முயற்சியா? ஒருவரின் மீது அன்பு செலுத்த முயற்சி தேவையா? நீங்கள் உண்மையிலேயே இதைத் தான் அர்த்தம் கொண்டு இக் கேள்வியை கேட்கிறீர்களா? பணிவுடன் இருப்பதற்கு முயற்சி தேவையா? உங்களிடமுள்ள சிறியவற்றை கொடுப்பதற்கு, உங்களுக்கு முயற்சி தேவையா?

Madras 1981/82 Q&A Meeting - 2, Question - 4

மனதினுடைய தந்திரமான விஷயங்களால் இதயம் நிரம்பாத போது, காருண்யம் கடினமானதாக இருக்காது. மனதின் கோரிக்கைகள் மற்றும் அச்சங்கள், அதன் பற்றுதல்கள் மற்றும் புறக்கணிப்புகள், அதன் தீர்மானங்கள் மற்றும் இச்சைகள் ஆகியவையே அன்பை அழிக்கிறது.

இவையெல்லாவற்றையும் குறித்து எளிமையாக இருப்பது எவ்வளவு கடினம்!

கனிவாகவும் பணிவாகவும் இருப்பதற்கு தத்துவங்களும் கோட்பாடுகளும் தேவையில்லை.

The Book of Life



Vasantha Ithaz Newsletter May 2019.indd 4 02-05-2019 3:46:56 PM

# ஆன்மீக வாழ்க்கை என்பது உனக்கு நீயே ஒளியாக இருப்பதே

**வா**ழ்க்கை என்றால் என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்? உங்களது வாழ்க்கை என்பது என்ன? உங்கள் தினசரி வாழ்க்கையாக உள்ளது எது? - சார்ந்திருத்தல், பற்று வைத்தல், வலி, நச்சரிப்பு, கோபம், எரிச்சல், துக்கம் என இவையெல்லாற்றையும் நீங்கள் அறிந்ததே, இல்லையா? இதுதான் உங்கள் தினசரி வாழ்க்கை. கோவிலுக்கு செல்வீர்கள், ஒருவகை சத்தத்துடன் மணியடிப்பீர்கள், பூஜை செய்வீர்கள், யோகாசனம் செய்வீர்கள். இதுதான் நமது வாழ்க்கை என்று நாம் சொல்கிறோம். சமயவுணர்வுள்ள வாழ்க்கைக்கு நீங்கள் கொள்ளும் பொருள் யாது? மதம் என்ற சொல்லுக்கு நீங்கள் என்ன அர்த்தம் கொள்கிறீர்? மதம் என்ற சொல்லிற்கு உங்கள் ஆற்றல் அனைத்தையும் ஒன்று சேர்ப்பது என்பது பொருளாகும் - விசாரணை செய்வதற்கும், கண்டறிவதற்கும் உங்கள் ஆற்றலனைத்தையும் ஒன்று சேர்ப்பதாகும். அதன் பொருள், கோவில்கள், சடங்குகள், உங்கள் நெற்றியில் ஒன்றை இட்டுகொள்வது போன்ற மூடத்தனமல்ல. நீங்கள் அனைவரும் ஒத்துக்கொள்கிறீர்கள் பாருங்கள்! அந்த சொல்லின் பொருள் என்னவெனில், உங்கள் ஒவ்வொரு சிறு துகள் ஆற்றலனைத்தையும் சேகரித்து, சத்தியம், உண்மை என்றால் என்னவென்று விசாரணை செய்தல்; தியானம் என்றால் என்னவென்று விசாரணை செய்தல்; மனிதர்கள் ஏன் இவ்விதத்தில் வாழ்க்கை வாழ்கிறார்கள் என்று விசாரணை செய்தல்; துக்கத்திற்கு முடிவு உண்டா என்பதை விசாரணை செய்தல்; அன்பு என்றால் என்னவென்று விசாரணை செய்தல்; எந்தவொரு முயற்சியும், கட்டுப்பாடின்றி வாழ முடியுமா என விசாரணை செய்தல், இவையெல்லாமே அவ்வார்த்தைக்கு பொருளாக அடங்கும். ஆன்மீக வாழ்க்கை என்பது உங்களுக்கு நீங்களே ஒளியாக இருப்பதே. அதாவது, வெளிப்புற அதிகாரம் இல்லாமல், ஆன்மீக அதிகாரம் இல்லாமலிருப்பதே, என்னை உட்பட.

உங்களுக்கு, யாரேனும் ஆன்மீக அதிகாரிகள் இருக்கிறார்களா? உங்களுக்கு பல்வேறு குருமார்கள் உண்டு - திரு. காந்தி மற்றும் பலர். 6ஆம், 5ஆம், 4ஆம், 3ஆம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை பல குருமார்கள் உண்டு. இந்த ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வழி நடத்தி செல்லப்படும் நீங்கள், இப்போது எந்த நிலையிலிருக்கிறீர்கள்? இப் போதும் உங்களை வழி நடத்தி செல்ல வேண்டுமா? ஆக, நாம் அன்போடு உங்களை கேட்கிறோம். உங்கள் பாரம்பரியத்தை தூக்கி எறிவீர்களா? பாரம்பரியம் என்று சொன்னால், தேசியவாதியாக இருப்பது, உங்களுடைய ஜாதி, உங்கள் நம்பிக்கைகள், உங்கள் சடங்குகள், கோவிலுக்கு செல்வது ஆகிய எல்லாமே அடங்கும். இவற்றை தூக்கி எறிவீர்களா?

**கூட்டத்திலிருந்து ஒருவர்:** மாட்டோம்.

**கிருஷ்ணமூர்த்தி:** எனில், நீங்கள் குருடராக இருப்பின், ஆன்மீக

## சமயம் – அது நாம் சாப்பிடும் உணவைப்போல இன்றியமையாதது

**எ**ன்னை பொறுத்தவரை சமயம் என்பது உங்கள் இதயம், மனம் மற்றும் மெய்யை முழுமையாக தரும் ஒரு விஷயமாகும். இது ஏதோ பொழுதுபோக்கும் ஒரு வழக்கமல்ல. அல்லது வயதாகிவிட்டபிறகு, செய்வதற்கு ஒன்றுமே இல்லாத சமயத்தில், சாகும் வயதில், 'சங்கரா சங்கரா' என்பதுமல்ல.

மாறாக, அது படுக்கையிலிருந்து எழுந்த கணம் முதல், மீண்டும் உறங்கப்போகும் வரை, வாழ்வின் முழுமைக்கும் நெறியாக இருப்பதுபோல மிகவும் இன்றியமையாத, அத்தியாவசிமானதாகும். ஆகையால், ஒவ்வொரு சிந்தனையையும், ஒவ்வொரு செயலையும், கணந்தோறும் ஏற்படும் மன உணர்ச்சிகளையும், கவனிக்கப்பட வேண்டும், அக்கறைகொள்ள வேண்டும், சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

என்னை பொறுத்தவரை ஒட்டுமொத்த வாழ்வையும் 'சமயம்' சூழ்ந்துள்ளது. அது ஒரு சில நிபுணருக்கு மட்டுமோ, ஏழைக்கு மட்டுமோ பணக்காரனுக்கு மட்டுமோ, சமூகத்தில் உயர்ந்த இடத்தில் உள்ளவருக்கு மட்டுமோ, அல்லது புத்திகூர்மையுள்ளவருக்கு மட்டுமோ உகந்தது என்பது கிடையாது. அது நாம் சாப்பிடும் உணவைப்போல இன்றியமையாதது.

நான் இப்படி கூறியது, வாதம் செய்வதற்காகவோ, காரணமேதுமின்றி ஒரு நம்பிக்கையுடன் தன்னை இணைத்துகொள்வதோ, மற்றவற்றை ஒதுக்கி தனிமைப்படுத்திக்கொள்வதோ, பிரிவிணைவாதியாகவோ அல்லது சிறப்புடையவர் என்று ஒரு குறிப்பிட்ட நபரை பின்பற்ற வேண்டும் என்று அர்த்தம் இல்லை. சமயம், அசாதாரண நுண்ணறிவை கோருகிறது; மாறாக, நம்பிக்கையையோ, அறிவையோ அல்ல. ஏனெனில், சமய உணர்வுள்ள மனிதரிடம் பரிபூரண விடுதலை இருக்கும்.

Talk 3, 1963 Saanen,
Collected Works, Vol XIII, page 288

வாழ்க்கையை எவ்வாறு கண்டறிவீர்கள்? ஆக, உங்களுக்கு ஆன்மீக வாழ்க்கை என்ன என்பதை கண்டு பிடிக்கவும் வேண்டும், அதேவேளை உங்கள் சிறிய இணைப்புகளை விட்டு விடவும் மாட்டீர்கள். இல்லையா? நீங்கள் உங்கள் பாரம்பரியத்துடன் இணைத்துக்கொண்டுள்ளீர்.

நீங்கள் விசாரணை செய்ய விரும்பும் அதற்கு, திறனுள்ள மனம், உண்மையிலேயே நேசிக்கும் இதயம் வேண்டும். இத்தகைய இதயமின்றி, உங்கள் பாரம்பரியம், கலாச்சாரம், நம்பிக்கை, ஆகியவற்றிலிருந்து விடுபடமால் எவ்வாறு ஒன்றை கண்டுபிடிக்க இயலும்? நீங்கள் கீதை, உபநிடதங்கள், மற்ற புத்தகங்கள் சொன்னதை அப்படியே திரும்ப கூறுவதாக இருக்கலாம். அதற்கு என்ன மதிப்பு இருக்கிறது? முன்பு ஒருநாள், சில குருமார்கள் கீதையை பற்றிய விரிவுரை, சொற்பொழிவை நடத்திக்கொண்டிருந்தனர். ஆயிரக் கணக்கான மக்கள் அங்கு சென்று அதை செவிமடுத்துக் கொண்டிருந் தனர். அதற்கு என்ன மதிப்பு இருக்கிறது? நாம் அனைவரும் எதை விளையாடிக் கொண்டிருக்கிறோம்? தனக்கு ஏற்பட்ட சோகவிளைவை தானே பார்க்கமுடியவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. இல்லையா?

மனோரீதியாக, பிறர் சொல்வதை நாம் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? நாமே ஏனைய மனிதகுலம் என்பதை உணர்ந்து கொள்கிறோமா? நானே மனிதகுலம். 'நான்' என்பதே மனிதகுலத்தின் வரலாறு, மனித குலத்தின் புத்தகம். அதை எப்படி வாசிப்பது என்பது எனக்கு தெரிந் திருந்தால், நான் யாரையும் சார்ந்து இருக்கமாட்டேன். ஆக, திரிபு ஏது மின்றி, அபிப்பிராயங்களின்றி, தேர்ந் தெடுப்பதின்றி இப்புத்தகத்தின் உள்ளடக்கங்களின் மீது நாம் விழிப்புணர்வுடன் இருக்க முடியுமா? அதாவது, நானாகவே உள்ள புத்தகம். அதை எந்த திரிபுமின்றி மிகவும் கவனமுடன் படிப்பதற்கு, ஆழ்ந்த கவனம், அதீத ஆற்றல், தீவிரம், விரைவு மனம் ஆகியவை தேவை.

இவையனைத்தையும் செய்ய நாம் தயாராக இல்லை. ஏனெனில், அது மிகவும் களைப்பை தருகிறது என்று நாம் நினைக்கிறோம். 'நான் என்ன செய்ய வேண்டும் என விரைவாக சொல்லுங்கள், நான் செய்கிறேன். அல்லது, நான் செய்யாமலும் இருப்பேன்' என்பீர்கள். பொதுவாகவே, நாம் அதை செய்வதில்லை. நான் தனிப்பட்ட முறையில் சிந்திப்பது என்னவெனில், மற்றவர் தரும் இந்த மனோ ரீதியான வழிகாட்டுதல், அது மத வழிகாட்டியாக இருந்தாலும் சரி, மனோதத்துவரின் வழிகாட்டியாக இருந்தாலும் சரி, எதுவானாலும், அது முற்றிலும் தவறானதாகும்.

ஏனெனில், நீங்கள் மனித குலத்தையே குழந்தையாக ஆக்கு கிறீர்கள். வழி நடத்த, சொல்லித்தர, ஊக்குவிக்க குழந்தைக்கு தேவைப் படுவது போல நமக்கும் தேவைப் படுகிறது. நாம் அனைவரும் வளர்ந்த மனிதர்களாக இருக்கிறோம் என நினைத்துக்கொண்டிருப்பினும் 10 மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் இவ்வாறே உள்ளோம்.

Madras (Chennai), Discussion - 3,
11th January 1979

**Statement about ownership and other particulars of Vasantha Ethal**

**FORM IV**

| | | |
|---|---|---|
| 1. Place of publication | : | Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 Greenways Road, Chennai – 600 028 |
| 2. Periodicity of publication | : | Once in four months (February, June, and October) |
| 3. Printer's name | : | N. Subramanian |
| Whether citizen of India | : | Yes |
| Address | | Sudarsan Graphics Offset Press, 27 Neelakanda Mehta Street, T.Nagar, Chennai - 600 017 |
| 4. Publisher's name | : | Dr. V. Aravind |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Anugraha, Flat No. 2, Old No 26, New No 51, Fourth Trust Cross Street, Mandavelli, Chennai – 600 028. |
| 5. Editor's Name | : | K. Krishnamurthy |
| Address | : | Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 Greenways Road, Chennai - 600 028 |
| 6. Name and address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. | : | Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 Greenways Road, Chennai – 600 028 |

I, Dr. V. Aravind, hereby declare that the particulars given are true to the best of my knowledge and belief.

(V.Aravind)

*Published in February, June & October.*

Periodical

*Registered with The Registrar of Newspapers for India under No. TNTAM/2006/17823*

*If undelivered please return to:*
KRISHNAMURTI FOUNDATION INDIA
Vasanta Vihar, 124,126 Greenways Road
Chennai - 600 028. Tel: 24937803/24937596
E-mail: publications@kfionline.org
Websites: www.kfionline.org / www.jkrishnamurti.org

*Published by Dr. V. Aravind on behalf of the Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 (Old 64, 65) Greenways Road, Chennai - 600 028. Printed by N. Subramanian at Sudarsan Graphics Offset Press, 27 Neelakantha Mehta Street, T. Nagar, Chennai – 600 017. Editor: K. Krishnamurthy*



Vasantha Ithaz Newsletter May 2019.indd 6 02-05-2019 3:46:57 PM